**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்**

**அ.வ.எண்.303/2017**

19.11.2019

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.**

**3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

என் தாயார் பெயர் நல்லமுத்து. தகப்பனார் பெயர் பழனிச்சாமி. என் தகப்பனார் பழனிச்சாமிக்கு என் தாயார் நல்லமுத்து இரண்டாவது மனைவி என்றால் சரிதான். பழனிச்சாமிக்கும் அவரது முதல் மனைவி சரஸ்வதிக்கும் நடந்த திருமணம் ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். சரஸ்வதியும், பழனிச்சாமியும் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். பழனிச்சாமியின் முதல் திருமணம் ரத்துசெய்யப்படாத நிலையில் என் தாயாரை திருமணம் செய்து கொண்டது சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரிதான்.சரஸ்வதிக்கும் பழனிச்சாமிக்கும் குழந்தைகள் இல்லை. என் தாயாருக்கும் பழனிச்சாமிக்கும் நான் மட்டுமே வாரிசு. 4 ம் பிரதிவாதிக்கும் பழனிச்சாமிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. 4 ம் பிரதிவாதி ஒரு ரங்கசாமிநாய்க்கர் மகன். பழனிச்சாமி கடந்த 28.12.2016 தேதியில் காலமாகி விட்டார்.

மறுவிசாரணை இல்லை.